# 13 ஐ நீக்க முற்பட்டால் இலங்கை பற்றி எரியும் டிலான் பெரேரா எம்.பி. பகிரங்க எச்சரிக்கை



அரசமைப்பில் இருந்து 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் இந்த நாடு பற்றி எரியக்கூடும், என்று பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார் டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா.

13ஆவது திருத்தச் சட்டம் என்பது அரசமைப்பில் உள்ள ஓர் அங்கம். அன்று முதல் இன்று வரை அதனை நான் ஆதரித்து வருகின்றேன். வடக்கு, கிழக்கு மாகாணம் இணைந்திருந்தவேளை காணி அதிகாரம் தொடர்பாக எனக்குக் கவலை இருந்தது. தற்போது அந்தக் கவலையும் இல்லை.

நான் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரிப்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் இருப்பதாகக் கருதிவிட வேண்டாம்.

தற்போதைய சூழ்நிலையில் 13 ஐ அமுல்படுத்தாவிட்டாலோ அல்லது மாகாண சபை முறைமையை இல்லாதொழித்துவிட்டாலோ இந்த நாடு பற்றி எரியும். எனவே, 13 ஐ அடிப்படையாகக் கொண்டுதான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முற்பட வேண்டும். இந்த முயற்சியின்போது அரசியல் 'கேம்'களுக்கு இடமளிக்கக்கூடாது, என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.


# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 31 புதன்கிழமை 16.08.2023 கதிர் 51



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


## அதிகாரப் பகிர்வு இப்போது எதற்கு? மொட்டு எம்.பி. எஸ்.பி. போர்க்கொடி



இனங்களுக்கிடையில் முறுகலை ஏற்படுத்தக்கூடிய அதிகாரப் பகிர்வு விடயத்தில் தற்போது கை வைப்பது ஏற்புடைய நடவடிக்கை அல்ல!, என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்திருக்கிறார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக்க் கருத்து

2➤

## குருந்தூர்மலையில் வெள்ளியன்று பொங்கல் விழா! அனைத்து மக்களுக்கும் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனாருக்கு எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை பொங்கல் விழா நடத்தப்படவுள்ளது. அனைத்து மக்களும் அணிதிரண்டு வந்து பொங்கல் விழாவில் கலந்துகொள்ள வேண்டும். எமது உரிமைகளை வென்றெடுக்க அனைவரும் அணிதிரள வேண்டும், என்று குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் அரசியல் தலைவர்கள் இணைந்து அழைப்பு விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் ஊடகச் சந்திப்பை நடத்தி இந்த அழைப்பை அவர்கள் விடுத்துள்ளனர்.

குறித்த ஊடகச் சந்திப்பில் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய பரிபாலன சபைத் தலைவர் து.விக்னேஸ்வரன், ஆலய

2➤

## அரச மருந்துக் கூட்டுத்தாபனத்திற்கு தலைவராக கலாநிதி அஜித் மெண்டிஸ்

இலங்கை அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக கலாநிதி அஜித் மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.



சுகாதார அமைச்சரினால் தமக்கு நியமனக் கடிதம் வழங்கப்பட்டதாகவும், நாளைய தினம் கடமைகளை பொறுப்பேற்கவுள்ளதாகவும் வைத்தியர் மெண்டிஸ் கூறியுள்ளார்.

கலாநிதி அஜித் மெண்டிஸ் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக முன்னர் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரபாகரனின் மனைவி, மகள் உயிருடனா?

### மறுக்கின்றது பாதுகாப்பு அமைச்சு

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மனைவி மதிவதனி மற்றும் அவரது மகள் துவாரகா ஆகியோர் உயிருடன் உள்ளனர் என வெளியாகும் தகவலைப் பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளது.

அத்துடன், இவ்வாறான செய்தி நகைப்புக்குரியது என்று பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பேச்சாளர் கேணல் நளின் ஹேரத் கொழும்பு ஊடகமொன்றிடம் தெரிவித்துள்ளார்.

மதிவதனி மற்றும் மகள் துவாரகா ஆகியோர் உயிருடன் இருக்கின்றனர் எனவும், அவர்களைத் தான் நேரில் சந்தித்தார் எனவும் மதிவதனியின் சகோதரி எனத் தன்னை அடையாளப்படுத்திக்கொண்ட பெண்ணொருவர் சமூகவலைத்தளங்களில்

2➤

## சினோபெக் எரிபொருள் விநியோகம் செப்டம்பர் 20இலிருந்து ஆரம்பமாகும்!

சினோபெக் நிறுவனத்தின் கீழ் செயற்படும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 20 ஆம் திகதியில் இருந்து வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் மின்சக்தி அமைச்சில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றைய தரவுகளுக்கு அமைய 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 109 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சினோபெக்குடன் ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை, எதிர்வரும் செப்டம்பர் மாதம் 20 ஆம் திகதியில் இருந்து வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சினோபெக் நிறுவனமும் அறிவித்துள்ளது.

முடியுமாயின் அதற்கு முன்னரே குறித்த செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் எனவும் அது தெரிவித்துள்ளது.

ஆரம்பத்தில் சினோபெக் நிறுவனத்தினர் இலங்கைக் கனியவளக் கூட்டுதாபனத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ள அதியுச்ச சில்லறை விலையில் எரிபொருள்களை விற்பனை செய்வதற்குத் தீர்மானித்துள்ளதாகவும்,

எந்தவொரு நிறுவனமும் இலங்கைக் கனியவளக் கூட்டுதாபனத்தின் விலை நிர்ணயத்தை விடவும் அதிக விலையில் எரிபொருளை விற்பனை செய்ய முடியாது எனவும் அமைச்சர் கஞ்சன விஜேசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இலங்கையில் தங்களது வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியும் என ஏனைய சர்வதேச எரிபொருள் நிறுவனங்களும் அறியப்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

## நிதி அமைச்சுக் கட்டடத்தில் தீ விபத்து!




இலங்கையின் பழைய நாடாளுமன்ற கட்டிடத்தில் அமைந்துள்ள நிதியமைச்சின் இரண்டாவது மாடியில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்து கொழும்பு மாநகர சபையின் மூன்று தீயணைப்பு வாகனங்கள் அனுப்பி வைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

அத்தோடு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

இலங்கையிலிருந்து வெளிவரும் மாலை செய்தி இதழ்

# ஜனாதிபதிப் பதவியை நான் ஏன் ஏற்கவில்லை?

## விளக்கமளித்தார் சஜித் பிரேமதாஸ

ஜனாதிபதி பதவியைத் தான் ஏற்காதமைக்கான காரணத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெளிவுபடுத்தியுள்ளார்.

விழுமியமிக்க சமூகத்துக்கான பிக்குகள் ஆலோசனைப் பேரவையின் இரண்டாம் கட்டம் நேற்று காலி மாவட்டத்தை இலக்காகக் கொண்டு, காலி நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாஸ தனது விளக்கத்தை வழங்கினார்.

நான் ஏன் ஜனாதிபதிப் பதவியை ஏற்கவில்லை, எனப் பலரும் விமர்சிக்கின்றனர். திருடர்களை வைத்து அரசியல் செய்ய வேண்டும் என்ற அச்சத்தாலும், வெட்கத்தாலும்தான் ஜனாதிபதிப் பதவியை நான் ஏற்கவில்லை.

புதிய ஆணையின்றி நாட்டின் பொறுப்பை ஏற்க



மாட்டேன். மகா சங்கத்தினரின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு, கொள்கைகளை மதித்து, கொள்கைசார் தூய்மையான பயணத்தை மேற்கொள்ள நான் தயார்!, என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கிறார்.

நாட்டுக்குத் தேவை தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் அல்ல என்றும், நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய நிகழ்ச்சி நிரலே தேவை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டார். (O3)

## பிரபாகரனின் மனைவி, ......

காணொளியொன்றை வெளியிட்டிருந்தார். அந்த வீடியோ வைரலானது.

“நெடுமாறனுக்குப் பிறகு இதோ அக்கா வந்துவிட்டார்” என விமர்சன ரீதியிலான பதிவுகள்கூட குறித்த காணொளி தொடர்பில் முன்வைக்கப்பட்டிருந்தன.

மக்களின் கவனத்தைத் தன் பக்கம் ஈர்த்துக்கொள்ளும் வகையிலேயே இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது என்றும், இதுவொரு நாடகம் என்றும் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (O3)

## குருந்தூர்மலையில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாக சபை உறுப்பினர் மற்றும் முன்னாள் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன், முன்னாள் கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் க.விஜிந்தன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு கருத்துக்களைத் தெரிவித்தனர்

இந்த விடயமானது நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், தொல்லியல் திணைக்களம் சைவ வழிபாடுகளை மேற்கொள்தற்கு எந்தத் தடையுமில்லை எனத் தெரிவித்திருந்தது. அதற்கமைய இந்தப் பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன.

எனவே, அனைவரும் இந்தப் பொங்கல் விழாவில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம், என்று அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (O3, க)

# மொஸ்கோவிற்கும் கொழும்புக்கும் இடையில் மேலதிக விமான சேவைகள்!

ரஷ்யாவின் ஏரோப்ளொட் அடுத்த மாதம் முதல் மொஸ்கோவிற்கும் கொழும்புக்கும் இடையிலான விமான சேவைகளை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது.

தற்போது வாரத்திற்கு மூன்று முறை ஏரோப்ளொட் நிறுவனம் கொழும்புக்கான விமான சேவையினை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கு மேலதிகமாக, செப்டம்பர் 9 ஆம் திகதி முதல் மொஸ்கோவிலிருந்து சனிக்கிழமைகளிலும், கொழும்பில் இருந்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் புதிய சேவையொன்று தொடங்குகிறது.

அதன்படி எஸ்.யூ.288 என்ற விமானம் மொஸ்கோவில் இருந்து 22:50 க்குப் புறப்பட்டு, மறுநாள் 10:20க்கு கொழும்பை வந்தடையும் என ஏரோப்ளொட் நிறுவனம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எஸ்.யூ.289 என்ற விமானம் கொழும்பில் இருந்து 12:05க்கு புறப்பட்டு 18:40க்கு மொஸ்கோவை வந்தடையும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# சுகாதார அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம்

நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையின் ஊழியர்கள் குழுவொன்று சுகாதார அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

2014ஆம் ஆண்டு நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டதன் பின்னர் உரிய முறையில் சம்பளம் வழங்கப்படவில்லை எனவும் மேலதிக கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சம்பளத்தின் ஒரு பகுதி வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள போராட்டக்காரர்கள், உரிய தீர்வுக்காக காத்திருப்பதாகவும் தெரிவித்தனர்.



எவ்வாறாயினும், சுமார் ஐந்து ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடலுக்கான வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## அதிகாரப் பகிர்வு இப்போது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதிகாரப் பகிர்வில் கை வைப்பதற்கான இது நேரமல்ல. வடக்கு மக்களுக்குப் பாரிய சில பிரச்சினைகள் உள்ளன. விவசாய நிலப் பிரச்சினை, வாழ்வாதாரப் பிரச்சினை, வீட்டுப் பிரச்சினை என்பன உள்ளன. அவை தொடர்பாகத் தற்போது நடவடிக்கை எடுக்கலாம்.

மாறாக, இனங்களுக்கிடையில் முறுகலை ஏற்படுத்தக்கூடிய விடயங்களில் கை வைக்கக்கூடாது, என்று வலியுறுத்திய அவர், நாட்டில் தற்போது நெருக்கடியான சூழ்நிலையே உள்ளது, - என்றும் தெரிவித்தார். (O3)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



## இலங்கைப் பொருளாதாரம் கானாவில் விமர்சனம்!



இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு இலங்கையின் மத்திய வங்கியே காரணம் என, கானா நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை தலைவர்த் ஒசி கியே-மென்சா போன்சு தெரிவித்துள்ளார்.

கானா மத்திய வங்கி தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை குறித்துகட கருத்துரைத்த போதே அவர் இலங்கை மத்திய வங்கியை இவ்வாறு விமர்சித்துள்ளார்.

2022 ஆம் நிதியாண்டில் கானாவின் மத்திய வங்கி பாரிய இழப்பைப் பதிவு செய்தது.

இதன் விளைவாக கானாவின் உள்நாட்டுக் கடன் பரிமாற்றத்தில் 50 சதவீதத்தைத் துண்டிப்பதற்கு நேர்ந்தது.

இதனையடுத்து கானா மத்திய வங்கியின் ஆளுநரைப் பதவி விலகுமாறு அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் சிறுபான்மையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்துரைத்துள்ள நாடாளுமன்றத்தின் பெரும்பான்மைத் தலைவர் ஒசி கியே- மென்சா போன்சு, கானா மத்திய வங்கி நேரடியாக நாடாளுமன்றத்துடன் தொடர்புடையது இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய வங்கி நிதியமைச்சருக்கு தங்களது நடவடிக்கைகள் தொடர்பாகத் தகவல் வழங்க வேண்டும். எனவே, மத்திய வங்கியின் பிரச்சினையை அரசியலாக்குவது நாட்டுக்குச் சிறந்ததில்லை எனவும் கானா நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை தலைவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையும் இதே போன்ற பொருளாதார நெருக்கடி நிலையில் காணப்பட்ட போது இலங்கை மத்திய வங்கியினால் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க முடியவில்லை. இலங்கையில் தொடர்ந்தும் பொருளாதார நெருக்கடி நீடிக்கிறது.

எனவே, தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் நாட்டிற்கு ஆதரவளிப்பதற்கு மத்திய வங்கிக்கு முடியுமாயின் அதற்கு ஆதரவளிக்க வேண்டும், என கானா நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை தலைவர் ஒசி கியே- மென்சா போன்சு தெரிவித்துள்ளார். (க)

# ஆயுதக் குழுக்களுக்கிடையே மோதல் லிபிய தலைநகரில் 27 பேர் பலி!

லிபிய தலைநகர் திரிபோலியில் இரண்டு ஆயுதக் குழுக்களுக்கு இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் 27 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த துப்பாக்கிச் சண்டையில் 106 பேர் காயமடைந்-துள்ளதாகவும் அந்த நாட்டு அவசர மருத்துவ உதவிப் பிரிவு அறிவித்துள்ளது.

2011 இல் மும்மர் கடாபி பதவியிலிருந்து அகற்றப்பட்டதிலிருந்து, அதிகாரத்திற்காக போட்டியிட்ட எண்ணற்ற போராளிக் குழுக்களில் 444 படைப்பிரிவுக்கும் அல்-ராடா அல்லது சிறப்புத் தடுப்புப் படைக்கும் இடையில் மோதல் ஆரம்பமாகியது.

தலைநகரின் தெற்கு புறநகர்ப் பகுதிகளில் உள்ள முன் வரிசைப் பகுதிகளிலிருந்து மொத்தம் 234 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டதாகவும், காயமடைந்தவர்களை சிகிச்



சைக்கு உட்படுத்தி வருவதாகவும் அந்நாட்டு அவசர மருத்துவ உதவிப் பிரிவு அறிவித்துள்ளது. (க)



# மியான்மரில் சுரங்கம் இடிந்து விபத்து பலியானோர் எண்ணிக்கை 31 ஆகியது!

மியான்மர் நாட்டின் கச்சின் மாகாணத்தில் உள்ள சுரங்கத்தில் ஏராளமான தொழிலாளர்கள் ஜேட் என்ற கனிமத்தைப் பிரித்தெடுக்கும் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தனர். அப்போது அந்த சுரங்கம் திடீரென இடிந்து விழுந்தது.

இந்தச் சுரங்க விபத்தில் சிக்கிய 30 க்கும் மேற்பட்டோரின் நிலை தெரியவரவில்லை எனக் கூறப்படுகிறது. எனவே, அவர்களைத் தேடும் பணியில் மீட்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நிலச்சரிவில் சிக்கிப் பலியானோர் எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளது. மேலும் எட்டுப் பேரைக் காணவில்லை என்றும், அவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் மீட்பு படையினர் தெரிவித்துள்ளனர். அங்கு பலத்த மழை பெய்து வருவதால் மீட்பு பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. (04)

# பிரபாகரனைப் போன்று கலைஞரையும் நேசித்தேன்! ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ தெரிவிப்பு



தி.மு.க.வின் முன்னாள் தலைவர் மறைந்த கலைஞர் கருணாநிதியையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனையும் தான் எப்போதும் சமமாகவே நேசித்ததாக மக்கள் திராவிட முன்னேற்ற கழக கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

மதுரையில் கட்சி உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசிய போதே, அவர் இந்த விடயத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ் மக்களின் நலன் கருதி தி.மு.கவுடன் நட்புக் கொண்டிருந்ததாகத் தெரிவித்துள்ள வைகோ, இலங்கைத் தமிழர்களின் உரிமைக்காக விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நட்பைப் பேணியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தி.மு.க.வின் முன்னாள் தலைவர் கலைஞர் கருணாநிதியையும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனையும் தான் எப்போதும் சமமாகவே நேசித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

படகில் சென்று விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைத் தான் சந்தித்தபோது, அந்தச் சந்திப்பிற்கும் கட்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லையெனத் தெரிவித்து தி.மு.கவினர் அறிக்கை வெளியிட்டனர்.

அதன்பின்னர், தன்னைக் கட்டாயப்படுத்தி பிரபாகரன் இந்தியாவிற்கு அனுப்பினார் எனவும், அப்போது கடிதம் ஒன்றை கலைஞருக்குக் கொடுக்குமாறு அவர் தன்னிடம் கொடுத்துவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவிற்குச் சென்று கடிதத்தைக் கலைஞரிடம் கொடுத்தபோது, என்னதான் பற்று இருந்தாலும் உயிரை வெறுத்துச் சென்றிருக்கக் கூடாது என கலைஞர் தன்னிடம் கூறியதாகவும் வைகோ தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளை ஆதரித்ததால் ஒருவருடம் சிறையில் அடைக்கப்பட்டதாகவும், இன்னும் ஒரு வருடத்தில் அந்த வழக்கு விசாரணைக்கு வருகிறது என்றும், அப்படியே தண்டனை வழங்கப்பட்டாலும் ஏற்கத் தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, தி.மு.கவில் இருந்து தான் நீக்கப்பட்டபோது, தொண்டர்கள் ஐந்து பேர் தீக்குளித்ததையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதன் பின்னர் தொண்டர்களின் விருப்பத்திற்கு அமைய, ம.தி.மு.க உருவாக்கப்பட்டதாகவும் வைகோ தெரிவித்துள்ளார். (க)

## தேர்தல் மோசடி வழக்கில் ட்ரம்ப்புக்குப் பிடியாணை!

அமெரிக்காவில் கடந்த 2017 முதல் 2021 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக இருந்த டொனால்ட் ட்ரம்ப், அங்கு அடுத்த ஆண்டு நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலிலும் குடியரசுக் கட்சி சார்பில் முன்னிலை வகிக்கிறார்.

ஆனால், தனக்கு எதிராகப் பாலியல் புகார் அளித்த பெண்களுக்கு, குற்றத்தை மறைப்பதற்காக பணம் வழங்குதல், வெள்ளை மாளிகையில் இருந்து ரகசிய ஆவணங்களைக் கடத்திச் சென்றமை உள்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் நிலுவையில் உள்ளன.

ஜோர்ஜியா மாகாணத்தில் 2020 ஆம் ஆண்டு நடந்த தேர்தல் மோசடி அதில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அந்தத் தேர்தலில் அவர், தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனுடன் போட்டியிட்டு



தோல்வியை தழுவினார்.

அந்தச் சமயத்தில் ஜோ பைடனுக்கு எதிரான வாக்குகளை கண்டறியும்படி உயர்மட்ட தேர்தல் அதிகாரி ஒருவருடன் ட்ரம்ப் தொலைபேசியில் பேசுவது போன்ற ஒலிப்பதிவு அங்குள்ள சமூகவலைதளங்களில் கசிந்தது. ஆனால், இந்த வழக்குகள் தனக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட சதி, என கூறிவரும் ட்ரம்ப், தன்மீதான அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுத்து வருகிறார்.

எனினும், தேர்தல் முடிவுகளை மாற்ற முயன்றதாக ட்ரம்ப் மற்றும் அவருக்கு உதவி செய்த 18 பேர் மீது தேர்தல் மோசடி வழக்கு தொடரப்பட்டது. இது தொடர்பான விசாரணை அங்குள்ள ஜோர்ஜியா மாகாண நீதிமன்றில் நடந்து வருகிறது.

இந்தநிலையில் குற்றப்பத்திரிகையில் உள்ள 19 பேரிடமும் ஒரே நேரத்தில் விசாரணை நடத்த நீதிமன்றம் முடிவு செய்தது. எனவே, ட்ரம்ப் உள்பட வழக்கில் தொடர்புடைய 19 பேருக்கும் பிடியாணை பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதேசமயம் வருகிற 25 ஆம் திகதிக்குள் தாமாக முன்வந்து ஆஜராகவும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் ட்ரம்ப் மீதான குற்றச்சாட்டு உறுதியானால் அவருக்கு 20 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன. (04)

# தமிழ் மக்களைச் சீண்டாதீர்கள்!

## சிங்கள இனவாதிகளுக்கு ராஜித எம்.பி. எச்சரிக்கை



“இனவாத, மதவாதக் கருத்துக்களைத் தெரிவித்து வடக்கு, கிழக்குத் தமிழர்களைச் சீண்டிப் பார்க்க வேண்டாம், என்று தெற்கு அரசியல்வாதிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன்.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

“கொடூரமான போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு தமிழர்கள் நிம்மதியான வாழ்வையே விரும்புகின்றார்கள். அவர்கள் சம உரிமைகளைத்தான் கேட்கின்றார்கள். இன்னொரு போரை அவர்கள் விரும்பவில்லை.

இந்த நிலையில், இனவாத, மதவாதக் கருத்துக்களைத் தெரிவித்து அவர்களைச் சீண்டிப் பார்க்க வேண்டாம், என்று தெற்கு அரசியல்வாதிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

இதை நான் சொல்வதால் எனக்கு எதிராகவும் விமர்சனங்கள் வரக்கூடும். அதை நான் பொருட்படுத்த மாட்டேன்! என்றும் அவர் குறிப்பிட்டார். (03)

# ஒற்றையாட்சிக்குப் பேராபத்து!

## பதறுகின்றார் விமல் வீரவன்ச

மாகாண சபை முறைமையிலுள்ள ஒத்திசைவுப் பட்டியலை நீக்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அதற்கு இடமளித்தால் ஒற்றையாட்சியைப் பாதுகாக்க முடியாத நிலை ஏற்படும், என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது மட்டுமல்ல அதற்கு அப்பால் அதிகாரங்களைப் பகிர்வதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. ஒத்திசைவுப் பட்டியலை நீக்குவதற்கான நடவடிக்கையும் இடம்பெறுகின்றது.

13 ஐ முழுமையாக அமுல்படுத்துவதற்கு இந்த நாட்டில் இருந்த ஏழு ஜனாதிபதிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்கு இனியும் இடமளிக்கக்கூடாது. மாகாணத்துக்கு இறைமையைப் பகிரவே இங்கு முயற்சி இடம்பெறுகின்றது. ஒத்திசைவுப் பட்டியல் நீக்கப்பட்டு, முழுமையாக அதிகாரங்களைப் பகிர்ந்தால் ஒற்றையாட்சியைக் காக்க முடியாது, என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். (03)

# தெஹிவளை மிருகக்காட்சி சாலையின் பிரதான பாதுகாப்பு அதிகாரி மரம் விழுந்து மரணம்

தெஹிவளை மிருகக்காட்சி சாலையின் பிரதான பாதுகாப்பு அதிகாரி பரிதாபகரமாகச் சாவடைந்துள்ளார்.

மரம் ஒன்று வேரோடு சாய்ந்து மின் கேபிள் கம்பத்தில் மோதி அவர் மீது விழுந்ததால் அவர் உயிரிழந்துள்ளார்.

54 வயதுடைய செனரத் மாரகந்த என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பலத்த காயங்களுக்குள்ளான அவர், களுபோவில போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் மாலை 5:30 மணியளவில் இறந்துவிட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.






# யாழ் சிறையில் கைதிக்கு கைப்பேசி சிக்கிய சிறை உத்தியோகத்தர்



யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதி ஒருவருக்கு தொலைபேசி வழங்கிய குற்றச்சாட்டில் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறைச்சாலையில் நடைபெற்ற சோதனையில் தொலைபேசி ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் கைப்பற்றப்பட்டது.

சிசிரிவி கண்காணிப்பு கமராக்களின் பதிவுகள் ஆராயப்பட்டு, கைதிக்கு தொலைபேசி வழங்கிய சிறை உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (01)

# பாம்புக்கடிக்கு ஆளான ஒன்றரை வயதுச் சிசு பலி

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரமந்தனாறுப் பகுதியில் இரவுவேளையில், பாம்புக் கடிக்கு ஆளான குழந்தையொன்று மரணமாகியுள்ளது.

ஒரு வயதும் 7 மாதங்களும் நிரம்பிய தனுஜன் ஜெஸ்மின் என்னும் ஆண் குழந்தை படுத்துறங்கிய நிலையில், பாம்புக் கடிக்கு உள்ளாகியுள்ளது.

உடனடியாக குடும்பத்தவரால் தருமபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் குழந்தை மாற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்திய சாலையில் சிறுவனைக் கடித்த பாம்பினைக் கொண்டுவருமாறு கூறியதை அடுத்து, கடித்த பாம்பினை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டபோதும், நேற்று மூன்று மணியளவில் சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்துள்ளது. (02)

# சர்வதேச நாணய நிதியக் குழு செப்டம்பரில் இலங்கைக்கு வரும்!

சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழுவொன்று, அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது.

கடந்த மார்ச் மாதம் அங்கீகரிக்கப்பட்ட 3 பில்லியன் அமெரிக்க டொலருக்கான, விரிவாக்கப்பட்ட நிதி வசதி தொடர்பான முதலாவது மீளாய்வுக்காக, அந்தக் குழு இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 14ஆம் மற்றும் 27ஆம் திகதிகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் குறித்த குழுவினர் இலங்கைக்குச் செல்லவுள்ளனர், என்று சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

முதலாவது மதிப்பாய்வின்போது ஜூன் மாதம் இறுதி வரையிலான விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் செயல்திறன் குறித்துப் பரிசீலிக்கப்படவுள்ளது.

இதனையடுத்து, குறித்த அதிகாரிகள் குழுவினாலும் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக சபையினாலும் அங்கீகரிக்கப்பட்டால், சுமார் 338 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி இலங்கைக்கு வழங்க அனுமதிக்கப்படும்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக சபை, கடந்த மார்ச் மாதம் 48 மாத விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் 3 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்குவதற்கு அங்கீகாரமளித்தது.

இதன் முதல் தவணையாக 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (க)

# கனடாவில் காரைதீவு மக்களின் ஒன்றுகூடல்






( வி.ரி.சகாதேவராஜா)

கனடா வாழ் காரைதீவு மக்களின் ஒன்றிய வருடாந்த ஒன்றுகூடலும் விளையாட்டு விழாவும் அண்மையில் ரொரன்ரோவில் நடைபெற்றன.

வைத்திய கலாநிதி அ.வரதராசா, பேராசிரியர் இ.பால சுந்தரம் உள்ளிட்ட பிரமுகர்கள் பங்கேற்றவர்களுக்கு பரிசு களும் வழங்கி வைத்தனர்.

# பாடசாலை சுற்றாடல் கழக சின்னம் சூட்டும் நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனைக் கல்வி வலய மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் சுற்றாடல் கழக மாணவர்களுக்கு சின்னம் சூட்டலும் தொப்பி அணிவித்தல் மற்றும் அடை யாள அட்டை வழங்கலும் கல்லூரி அதிபர் ஐ.உபை துல்லா தலைமையில் கல்லூரி திறந்தவெளி அரங் கில் நடைபெற்றது.

"சுற்றாடலைப் பாதுகாப்போம் சுற்றாடல் நம்மைப் பாதுகாக்கும்" எனும் தொனிப்பொருளில் மாணவர்கள் மத்தியில் விசேட உரையும் நிகழ்த்தப்பட்டது.




# தாருல் அர்கம் முன்பள்ளி சிறுவர் சந்தை 2023






(நூருல் ஹுதா உமர்)

கடந்த 18 வருடங்களுக்கு மேலாக கல்முனை யில் இயங்கிவரும் தாருல் அர்கம் முன்பள்ளியின் 2023 ஆம் ஆண்டிற்கான சிறுவர் சந்தை நிகழ்வு பாடசாலை முகாமைத்துவப் பணிப்பாளர் அமீர பாறூக் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூரும், கௌரவ அதி திகளாக கல்முனை அஸ்-ஸுஹறா வித்தியாலய அதிபர் திருமதி எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதியாவும், அம்பாறை மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோ-கத் தர் முஹம்மது அஸாருதீனும் கலந்து சிறப்பித்த னர்.

முன்பள்ளியின் ஆசிரியர்கள், பெற்றோர்கள், ஊர் மக்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்ட னர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.08.2023இல் வெளியிடப்பெற்றது.